செய்தி வெளியீடு எண். 74-2018 நாள்: 29.10.2018

# விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி-24ல், பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண்குழந்தைகளுக்கு மாநில அரசு விருது வழங்க தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

******

தமிழக அரசு, சமூகநலம் சத்துணவு திட்டத்துறை மூலம் "பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண்குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும், பாடுபட்டு வீரதீர செயல் புரிந்து வரும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளை சிறப்பிக்கும் முகமாக அதற்கான மாநில விருது ஒன்றை அறிவித்து அரசாணை பிறப்பித்து கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இதன்படி, வருடந்தோறும் மேற்குறிப்பிட்டவாறு சேவை புரிந்து வரும் சிறந்த குழந்தை ஒருவருக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி-24) பாராட்டு பத்திரமும், ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த 10ஆம் வகுப்பு படிக்கும் செல்வி.ந.நந்தினி, என்ற சிறுமிக்கு அவர் தனக்கு நடக்கவிருந்த குழந்தைத் திருமணத்தை துணிச்சலுடன் போராடி நிறுத்தியமைக்காக, கடந்த 24.01.2018 அன்று ஒரு இலட்ச ரூபாக்கான காசோலையும், பாராட்டு பத்திரமும், மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

அதேபோன்று வருகிற ஜனவரி 2019ல் தேசிய பெண்குழந்தை தினத்தில் மாநில விருது வழங்கிட 18 வயதிற்குட்பட்ட (31 டிசம்பர் 2018ன்படி) மேற்குறிப்பிட்டவாறு தகுதியான பெண் குழந்தைகளிடமிருந்து விண்ணப்பங்கள் 30.11.2018 வரை வரவேற்கப்படுகின்றன.

விருதிற்கான விண்ணப்பங்கள் தலைமையாசிரியர் மற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்/ மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்/ மாவட்ட திட்ட அலுவலர் (ஒழுவதி)/ காவல்துறை/ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் வாயிலாக உரிய முன் மொழிவுகளுடன் மாவட்ட சமூகநல அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பங்கள் கூர்ந்தாய்வு செய்து, மாவட்ட ஆட்சியர் பரிந்துரையுடன் சமூகநல ஆணையரகத்திற்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்படும். மாவட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மாநில அளவில் தேர்வு குழு மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, அனைத்து தகுதிகள் பெற்ற ஒரு பெண்குழந்தைத் தேர்வு செய்யப்பட்டு 24.01.2019 அன்று மாநில விருது வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.